

நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, 28.6.2023 அன்று சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 18 ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர்களுக்கு புதிய வாகனங்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், சேலம் மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலச்சந்தர், ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மரு.அலர்மேல் மங்கை, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ. மேனகா, சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் திருமதி.ரேவதி ராஜசேகர், துணை மேயர் திருமதி.எஸ்.சாரதாதேவி. முன்னாள் அமைச்சர் டி.எம்.செல்வகணபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2022 - 2023 கீழ் திருப்பூர் தெற்கு மாவட்டம், மூலனூர் ஒன்றியம், குமாரபாளையம் மற்றும் வேளாம்பூண்டி ஊராட்சியில் ரூ.69.33 இலட்சம் மதிப்பீட்டில் சரவணக்கவுண்டன் வலசு முதல் குமாரபாளையம் வரை சாலை அமைக்கும் பணியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர், தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன், மாவட்ட துணை செயலாளர் ராசி முத்துக்குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் ப.பழனிசாமி, துரை தமிழரசு, பேரூர் கழக செயலாளர் க.தெண்டபாணி, குமாரபாளையம் ஊராட்சி மன்றத்தலைவர் செல்லமுத்து, மாவட்ட அறங்காவலர் குழுத்தலைவர் கீர்த்தி சுப்பிரமணியம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும்

# பாதாள சாக்கடைப் பணிகளை விரைந்து முடித்திடுவீர்!

## அமைச்சர் கே.என்.நேரு 18 புதிய வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்து அறிவுரை!

சேலம், ஜூலை 1-

நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, 28.6.2023 அன்று சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம் தலைமையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர்களின் பயன்பாட்டிற்காக 18 புதிய வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்து தெரிவித்ததாவது:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, கடந்த 2008ஆம் ஆண்டில் முதன் முதலாக ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர்கள் பயன்பாட்டிற்காக வாகனங்கள் வழங்கப்பட்டன. அதனை தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்கும் புதிய வாகனங்கள் வழங்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 22.4.2022 தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110ன் கீழ் அறிவித்தார்.

அதனடிப்படையில், தமிழ்நாட்டில் உள்ள 388 ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர்களுக்கான புதிய வாகனங்கள் வாங்க அறிவிப்பு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 10.05.2023 அன்று தலைமைச் செயலகத்தில் சேலம் மற்றும் வீரபாண்டி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்கான இரண்டு புதிய வாகனங்கள் உட்பட 25 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 200 புதிய வாகனங்களை கொடி அசைத்து துவக்கி வைத்தார்கள்.

அந்தவகையில் இன்றைய தினம் சேலம் மாவட்டத்தில், மீதமுள்ள 18 ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர்களின் பயன்பாட்டிற்காக (பனமரத்துப்பட்டி, அயோத்தியாப்பட்டணம், வாழப்பாடி, ஏற்காடு, பெத்தநாயக்கன் பாளையம், ஆத்தூர், கெங்கவல்லி, தலைவாசல், கொளத்தூர், நங்கவள்ளி, மேச்சேரி, தாரமங்கலம், ஓமலூர், காடையாம்பட்டி, சங்ககிரி, எடப்பாடி, கொங்கணாபுரம் மற்றும் மகுடஞ்சாவடி) புதிய வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள், அவ்வொன்றியப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சித் திட்டப் பணிகளைக் கண்காணிக்க ஏதுவாக தற்போது 13 ஆண்டுகள் கடந்த நிலையில் மீண்டும்புதியஸ்கார்பியோ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்டப் பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலுக்கிணங்க சென்னை மாநகராட்சி மேயர் மற்றும் அரசு அலுவலர்கள் குழு வெளிநாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களை ஆய்வு செய்து அதனை தமிழ்நாட்டில் நடைமுறைபடுத்த தனி கவனம் செலுத்தி வருகிறது. அதேபோல் பொதுமக்களும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து வழங்க வேண்டும் என நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சேலம் மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலச்சந்தர், ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மரு.அலர்மேல் மங்கை, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ.மேனகா, சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் திருமதி.ரேவதி ராஜசேகர், முன்னாள் அமைச்சர் டி.எம்.செல்வகணபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், துணை மேயர் திருமதி.எஸ்.சாரததேவி மற்றும் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர்கள் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அரியலூர் மாவட்டத்தில்

# ரூ.11.44 கோடி மதிப்பீட்டில் 6 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்!

அரியலூர், ஜூலை 1 -

அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியத்தில் ரூ.11.44 கோடி மதிப்பீட்டில் 6 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழக மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் இன்றைய தினம் அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

இதன்படி நெடுஞ்சாலைத்துறை நபார்டு மற்றும் கிராம சாலைகள் அலகு சார்பில் ஊராட்சி ஒன்றிய சாலைகளை இதர மாவட்ட சாலைகளாக தரம் உயர்த்துதல் திட்டத்தின் கீழ் ரூ.6.45 கோடி மதிப்பீட்டில் இலைக்கடம்பூர் முதல் R.S.. மாத்தூர் சாலை கி.மீ 0/0 5/5 தரம் உயர்த்துதல் பணியினை துவக்கி வைத்தார். இந்த சாலையினை செயல்படுவதும் மூலம் செந்துறை, R.S.மாத்தூர், படைவெட்டிக்குடிகாடு, சோழங்குடிக்காடு, சன்னாசிநல்லூர், பெரியாக்குறிச்சி, நத்தக்குழி, பொன்பரப்பி மற்றும் திட்டக்குடி ஆகிய பகுதிகளில் உள்ள பொது மக்கள் பயன்பெறுவார்கள்.

மேலும் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் முதல்வரின் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.75.19 இலட்சம் மதிப்பிட்டில் பொன்பரப்பி முதல் சிறுகளத்தூர் சாலை மேம்படுத்தல் (கி.மீ 0/0 1/0) பணியினையும், முதல்வரின் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1.24 கோடி மதிப்பிட்டில் சிறுகளத்தூர் முதல் கொடுக்கூர் சாலை மேம்படுத்தல் (கி.மீ 0/02/600) பணியினையும், முதல்வரின் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.71.43 இலட்சம் மதிப்பிட்டில் சன்னாசிநல்லூர் முதல் தளவாய் பள்ளி சாலை மேம்படுத்தல் (கி.மீ 0/00/910) பணியினையும், முதல்வரின் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1.92 கோடி மதிப்பிட்டில் அயன்தத்தனூர் முதல் முல்லையூர் பள்ளி சாலை மேம்படுத்தல் (கி.மீ 0/04/130) பணியினையும் அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் துவக்கி வைத்தார்.

தொடர்ந்து குழுமூரில் 15வது நிதி குழு மானியம் (சுகாதார நிதி) திட்டத்தின் கீழ் ரூ.35 இலட்சம் மதிப்பிட்டில் குழுமூர் துணை சுகாதார மைய கட்டிட கட்டுமானப் பணியினையும் துவக்கி வைத்தார். மேலும் நடைபெறும் பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் மகளிர் திட்ட இயக்குநர் முருகண்ணன், வருவாய் கோட்டாட்சியர் பரிமளம், கோட்டப் பொறியாளர்( நபார்டு மற்றும் கிராம சாலைகள் திருச்சி) பெ.வடிவேல், உதவிக் கோட்டப் பொறியாளர் அரியலூர் வி.பி.சரவணன், உதவி பொறியாளர் எஸ்.பிரியதர்ஷினி, வட்டாட்சியர் பாக்கியம் விக்டோரியா,

கழக கொள்கைப் பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, ஒன்றிய செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன்,

ஒன்றிய அவைத் தலைவர் சி.அன்பழகன் ஒன்றிய துணை செயலாளர்கள் சே.ஆசைதம்பி, துரை.ரவி, சத்தியபாமா புலேந்திரன், காளமேகம், ஒன்றிய பொருளாளர் சி. நன்னன், மாவட்ட கழக பிரதிநிதிகள் ரா.கோடி, மு.சபாபதி, வி.ஆறுமுகம், பொதுக்குழு உறுப்பினர் சுமதி கருணாநிதி மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர்

பி.ஆர். பாண்டியன் மா.வி.தொ.து. அமைப்பாளர் கோ.சின்னதம்பி , மா.மீ.அ.து. அமைப்பாளர் ப.கலையரசன் , ஒ.இ. அமைப்பாளர் ஆ.தமிழ்மாறன், ராமராஜன், செந்தமிழ், ஒ.மா.அ. அமைப்பாளர் ராஜவேல் , முன்னாள் ஒ.த.தொ.அ. ஒருங்கிணைப்பாளர் கோபி, ஒ.த.தொ.அ. ஒருங்கிணைப்பாளர் கடலரசு, ஒன்றிய குழு உறுப்பினர் ரங்கநாதன், ஒன்றிய குழு உறுப்பினர் பூங்கொடி ராமலிங்கம், மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் சித்ரா, ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரமணி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், அரசு அலுவலர்கள்,மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

திருவாரூர் - தலைமைச் செயற்குழு முன்னாள் உறுப்பினர்

# எடையூர் ந.உ.சிவசாமி மறைவு!

## கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 1 –

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஒன்றியம் எடையூரைச் சேர்ந்த தலைமைச் செயற்குழு முன்னாள் உறுப்பினர் ந.உ.சிவசாமி அவர்கள் நேற்று முன்தினம் (29.6.2023) இயற்கையெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.

உலகத்திலேயே விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கி

# விவசாயிகள் நலனில் அக்கறை உள்ள அரசாக தி.மு.க. அரசு திகழ்கிறது!

## கால்நடைகளுக்கான இலவச மருத்துவ முகாமைத் தொடங்கி வைத்து அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேச்சு!

செஞ்சி, ஜூலை 1 -

விழுப்புரம் மாவட்டம் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டுபிறந்தநாள்விழாவை முன்னிட்டுசெஞ்சிஒன்றியம் ஆலம்பூண்டி ஊராட்சியில் கால்நடைசிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர்விஜயகுமார்தலைமை தாங்கினார். கால்நடை துறை மண்டல இணை இயக்குனர் மருத்துவர் ராஜேந்திரன்அனைவரையும் வரவேற்றார்.

துணைப் பதிவாளர் பால்வளம்ஸ்ரீகலாஆவின்துணைப் பொது மேலாளர் மருத்துவர் அருணகிரிநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சத்தியமங்கலம்கால்நடை மருத்துவர் துரைமுருகன் முகாம் விளக்க உரை யாற்றினார்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு கால்நடை சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைத்து சிறந்த கன்றுகளைவளர்த்த கால்நடை உரிமையாளர்களுக்குஅமைச்சர்செஞ்சி மஸ்தான் பரிசுகளை வழங்கி சிறப்புரை யாற்றினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான் உலகத்திலேயே விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

இன்று அவரின் நூற்றாண்டுபிறந்தநாள்விழாவில் தமிழகம் முழுவதும் சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் அமைத்துகால்நடைகளுக்கு குடல் புழு நீக்கம் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும் ஆட்சி பொறுப்பேற்றவுடன்முதலமைச்சர்விவசாயத்துறைக்கு தனி நிதி நிலையை அறிக்கையை அறிவித்துவிவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து விவசாய நலனில் ஒரு அக்கறை உள்ள முதலமைச்சராகவும், தாய் உள்ளத்தோடு இன்று கால்நடைகளுக்கு சிறப்பு மருத்துவ முகாமை அமைக்கஉத்தரவிட்டுஉள்ளதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில்ஒன்றிய செயலாளர்கள்நெடுஞ்செழியன், பச்சையப்பன்,விஜயராகவன் துணை சேர்மன் ஜெயபாலன்,கால்நடைமருத்துவஅறிவியல் பல்கலைக்கழகத்தின் உதவி பேராசிரியர் பாக்கியராஜ், முதுநிலை ஆய்வாளர் ஜெயகணேஷ்,ஒன்றியகவுன்சிலர்கள் கேமல், டிலைட், ஊராட்சிமன்றதலைவர்முத்தம்மாள் சேகர், பால் கூட்டுறவு சங்கத் தலைவர் குண்டு ரெட்டியார், நிர்வாகிகள் சங்கர், அண்ணாமலை, ரமேஷ், சிவராமன், ராஜேந்திரன், சந்திரசேகரன், விஜயன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர்

# சாக்கோட்டை க.அன்பழகன் இளைய சகோதரர் க.உண்மை மறைவு!

## அமைச்சர்கள் கே.என்.நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் அஞ்சலி!

தஞ்சாவூர் ஜூலை 1 -

கும்பகோணம் பெரியார் பெருந்தொண்டர் மறைந்த கணபதி - ஏகாம்பாள்இளையமகனும், கும்பகோணம் ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர் மறைந்த க.பெர்னாட்ஷா, சாக்கோட்டை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் க.ஆனந்தம், க. திராவிட அரசு, கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான சாக்கோட்டை க.அன்பழகன் ஆகியோரின் இளைய சகோதரரும், வழக்கறிஞர் உ.கரிகாலன் தந்தையார் க.உண்மை 28.06.2023 புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் உடல் நலக்குறைவால் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்த கழகப் பொருளாளரும், அமைச்சருமான கே.என்.நேரு, வேளாண்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி, துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ, பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ, நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ, செ.இராமலிங்கம் எம்.பி, அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி. செழியன் எம்.எல்.ஏ, என். அசோக்குமார் எம்.எல்.ஏ, தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், திருச்சி மாநகர மேயர் அன்பழகன், கும்பகோணம் மாநகரக் கழகச் செயலாளர், துணை மேயர் சு.ப.தமிழழகன், மற்றும் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், நிர்வாகி கள், உள்ளாட்சி பிரதிநிதி கள், அரசு அதிகாரிகள் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் 29.06.2023 வியாழன் மாலை 04.00 மணிக்கு கும்பகோணம், சாக்கோட்டையில் நடைபெற்றது.



முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2022 - 2023 கீழ் திருப்பூர் வடக்கு மாவட்டம், அவிநாசி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருமுருகன்பூண்டி ஒன்றியம், வேலாயுதம்பாளையம் ஊராட்சியில் பல்லடம், அவிநாசி சாலை முதல் காசிகவுண்டர்புதூர் (வழி) ஆதிதிராவிடர் காலனி வரை ரூ.15.17 இலட்சம் மதிப்பில் தார் சாலை அமைக்கும் பணி, பல்லடம், அவிநாசி சாலை முதல் வேலாயுதம் பாளையம் (வழி) ராயன்கோயில் காலனி பட்டறை வரை ரூ.74.17 லட்சம் மதிப்பில் தார் சாலை அமைக்கும் பணியினை திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர் க. செல்வராஜ் முன்னிலையில் கழக துணை பொதுச் செயலாளர் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.ராசா எம்.பி., தொடங்கி வைத்தார். இதில் ஒன்றிய கழக செயலாளர் எஸ்.ஆர்.பழனிச்சாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சரவணன் நம்பி உள்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**எஸ். கலைச்செல்வன்**

**ஜூலை 1 (2018)**



இளம்வயதிலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, தீவிர கழகக் பணியாற்றியவர்.

தேனி மாவட்டம், காக்கில் சிக்கையன்பட்டி கிளைச் செயலாளர், ஒன்றிய துணைச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, கம்பம் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**